# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.66/2026 | Date | : 13.05.2026 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : சதீஸ்குமார் | Calling | : |
| Father Name | : லோகநாதன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.05.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மோரூரில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 24-09-2025 ம் தேதி, மதியம் சுமார் 02.30 மணியளவில் நான் வீட்டில் இருந்து திருச்செங்கோடு to சங்ககிரி செல்லும் சாலையில் கோழிக்கால் நத்தம் பெட்ரோல் பங்க் அருகே இருசக்கர வாகனத்தில் ரோட்டை கடப்பதற்காக இன்டிகேட்டர் போட்டு திரும்பியபோது, அதே திசையில் வந்த Yamaha R15 இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் அதிவேகமாக வந்து நான் சென்ற இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டார்.

2) மோதியதில் எனக்கு வலது பக்க தோள்பட்டை, வலது பக்க கன்னம், வலது கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டது. ஆஜர் எதிரி தான் என்மீது மோதிய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் ஆவார். பின்னர், என்னை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு தன்வந்திரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

பின்னர், மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு திருக்குமரன் மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் திருக்குமரன் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

1) எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் புகார் வாக்குமூலம் கொடுத்தபோது போலிசாரிடம் எனது ஆதார் கார்டில் உள்ள அரசிராமணி முகவரியை கொடுத்தேன் என்றால் சரிதான். நான் இன்டிகேட்டர் போடாமல் இருசக்கர வாகனத்தை திருப்பினேன் என்றால் சரியல்ல. நான் எனது புகார் வாக்குமூலத்தில் இன்டிகேட்டார் போட்டு வாகனத்தை திருப்பியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) நான் இன்டிகேட்டர் போட்டு வாகனத்தை திருப்பியிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் சாலை விதிகளை பின்பற்றாமல் வாகனத்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. எனது இருசக்கர வாகனத்தின் எந்த பகுதியில் எதிரியின் இருசக்கர வாகனம் மோதியது என்றால் எனது இருசக்கர வாகனத்தின் நடுப்பகுதியில் மோதியது. நான் ரோட்டை கடக்க திரும்பியபோது நிலைதடுமாறி விழுந்துவிட்டேன் என்றும், பின்னால் வந்த எதிரி வண்டியை கட்டுப்படுத்த பிரேக் போட்டதால் தவறி விழுந்து அவருக்கும்,

அவரது இருசக்கர வாகனத்திற்கும் அடிப்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Sathishkumar

Judicial Magistrate No.1,

Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.66/2026 | Date | : 13.05.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : கவிதா | Calling | : |
| Husband Name | : குமார் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.05.2026.

<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், பால்மடையில் வசித்து வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 24-09-2025ம் தேதி, மதியம் சுமார் 02.30 மணியளவில் அ.சா.1 இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்து கொண்டு கோழிக்கால் நத்தம் சிக்கன் வாங்க சென்றோம். அப்போது, பெட்ரோல் அடிப்பதற்காக அ.சா.1 இன்டிகேட்டர் போட்டு திரும்பும்போது, அதே திசையில் பின்னால் வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் அ.சா.1 சென்ற இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டார்.

2) மோதியதில் அ.சா.1க்கு வலது பக்க தோள்பட்டை, தலை, வலது பக்க கன்னம், வலது கால் ஆகிய இடங்களிலும், எனக்கு வலது பக்க தோள்பட்டை, வலது முன்தலை, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டது. அடிப்பட்ட நான் திருச்செங்கோடு

தாமரை கண்ணன் மருத்துவமனைக்கு சென்று முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு மேல்சிகிச்சைக்காக ஈரோடு பிரீத்தி மருத்துவமனைக்கு சென்றேன். நான் மோதியதும் மயக்க மடைந்துவிட்டதால் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்திய நபரை பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

1) அ.சா.1 இன்டிகேட்டர் போடாமல் இருசக்கர வாகனத்தை திருப்பினார் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் இன்டிகேட்டார் போட்டு வாகனத்தை திருப்பியதாக அ.சா.1 சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் அ.சா.1 தான் என்றும், விபத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

2) என்னை எப்போது போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் விபத்து நடந்த மறுநாள் ஈரோடு பிரீத்தி மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Kavitha

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.66/2026 | Date | : 13.05.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : ராஜ்குமார் | Calling | : |
| Father Name | : ஜெகநாதன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.05.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மோரூரில் வசித்து டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 26-09-2025 ம் தேதி, காலை சுமார் 11.00 மணியளவில் நான் திருச்செங்கோடு to சங்ககிரி செல்லும் சாலையில் உள்ள பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடுவதற்காக சென்றேன். அப்போது, போலிசார் அங்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த விபத்து சம்பந்தமாக விசாரித்துகொண்டிருந்தனர்.

2) போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், மோகன்ராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 1வது சாட்சி கையொப்பம் மோகன்ராஜ் என்பவருடையது ஆகும். **( பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

போலிசார் எழுதிய தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்த்தேன். இரண்டு கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை, தாள்கள் வைத்திருந்தார்கள், அதில் ஒரு தாளில் கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் அடிப்பட்டவர் எனக்கு உறவினரா என்றால் ஆமாம். விபத்தில் அடிப்பட்டவர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Rajkumar